# இந்துசாதனம்

விரோதி வருஷம (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூச] யாழ்ப்பாணம்:- நந்தன ஹூ ஆடிமீ ௧௦ உ வெள்ளிக்கிழமை (25 July 1952) [இல - உகூ]


# விண்ணோர்விருந்தமிழ்தின் மேலான தமிழ்ப் பண்பு

## முத்தமிழ் மன்றத்தில் :: இன்பக் கலை இரசம் ::

(வரவேற்புத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் நிகழ்த்திய உரை)

அன்பர்களே!

இன்று நாம் கொண்டாடும் இவ் விழா மூன்ருவது முத்தமிழ்விழாவாகும். ஓரின மக்களின் பண்பாடும் நாகரிகமும் உயர்வும் அவர்களுடைய மொழியின் பெருமையிலும் கலைகளின் சிறப்பிலுமே தங்கியுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். நம் முன்னோர்கள் இந்த உண்மையினை நன்கறிந்திருந்தனர். தமிழ் மொழியினைத் தமது உயிரினும் மேலாக மதித்து வளர்த்தனர். "இருந்தமிழே உன்னால் இருக்கின்றேன் இமையோர் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்" என்று பெருமிதங் கொழிக்கப் பாடினூர் ஒரு புலவர். பண்பாடு சிறந்து ஓங்காவிடில் மக்கள் மரங்களாகவே வாழ்வார்கள் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். விவேகம் எவ்வளவு சிறந்து விளங்கினும் பண்பாடு இன்றேல் அது பயனளிக்காது; பண்பாடில்லாத விவேகிகள் மரங்களைப் போன்றவர்களென்று திருவள்ளுவர் கூறியுளர். "அரம்போலுங் கூர்மையரேனும்மரம்போல்வர் மக்கட்பண் பில்லாதவர்" என்பது அவர் திருவாக்கு.

### இன்பக் கலைகள்

அறிவுக் கலையிலும் பார்க்க இன்பக் கலையே பண்பாட்டினை வளர்க்கும் என்றும் நமது அறிஞர்கள் கண்டார்கள். இதனுலேயே பண்பாட்டினை வளர்க்கும் இலக்கியம்; இசை, நாடகம் என்னுங் கலைகளைத் தமிழ் மொழியின் பகுதிகளாக அவர்கள் அமைத்துத் தமிழை முத்தமிழாக்கினூர்கள். இன்பக்கலைகளுள்ளே மொழியோடு தொடர்புற்றவை இம்மூன்றுமே என்பதையும் நாம் மறக்கக்கூடாது. இந்தக் கலைஞர்களை புலவர்கள் போற்றிவளர்த்தார்கள். இவற்ருல் வரும்பயனை தமிழ் மக்கள் யாவரும அனுபவிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினூர்கள். மக்களிடையே மாததிரமன்றி இயற்கைப்பொருள்களாகிய மலை, சோலை முதலியவற்றிலுங்கூட இசையரங்குகளையும் நாடக மேடைகளையும் சுட்டிக்காட்டி இக் கலைகளின் பெருமையினைத் தமிழ்மக்கள் யாவரும் நன்கு உணருமாறு செய்துளர். சங்க நூல்கள் பலவற்றிலே இந்தக் கலைகளைப்பற்றி பல உண்மைகளை நாம அறியலாம். இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரத்திலே முத்தமிழ் முழங்குகிறது. பின்னர்த் தோன்றிய புலவர்களும் இக் கலைகளுக்கு முதன்மையளித்தனர். இவர்களுள்ளே கம்பர் தீட்டிக் காட்டும் காட்சிகள் சிலவற்றைக்கண்டு மேற்செல்வோம்.

கம்பர் தமது பெருங் காவியமாகிய இராமாயணத்தின் முதற் பகுதியிலுள்ள நாட்டுப் படலம், நகரப் படலம் முதலியவற்றிலே இயல், இசை, நாடகங்களின் பெருமையையும் பயனையும்பற்றி பாக்கப்பாடியதோடமையாது மிதிலைக் காட்சிப் படலத்திலும் இவற்றைப்பற்றிக் கூறுகின்றூர். விசுவாமித்திரரோடு இராமரும் இலக்குவனும் மிதிலை நகர்புக்கு, அதன் வீதிகளிலே செல்லுகின்றனர். அங்கே அவர்கள் பக்கவாத்தியங்களுடன் பெண்கள் பாடி அழகாக நடிக்கும் நடனசாலையைக் கண்டார்கள் —

"நெய்திரள் நரம்பிற்றந்த
மழலையின் நிறைந்த பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை
தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக்
கண் வழி மனமுஞ் செல்ல
ஐய நுண்ணிடை யாராடும்
ஆடக அரங்குகண்டார்".

இப்பாடலில் பாட்டுக்கும் பக்கவாத்தியங்களுக்கும் உள்ள தொடர்பையும் நடனமாடும் முறையையும் எவ்வளவு சிறப்பாகவும் நுட்பமாகவும் கம்பர் காட்டியிருக்கிறூர் பாருங்கள்.

### செவி மடுக்குந் தீந்தேன்!

மாதர்கள் வீணை வாசித்து இசை விருந்தையளிக்கும் பெருஞ் செயலை பின்வருஞ் செய்யுளிலே குறிப்பிடுகிறூர் கம்பர்,

'வள்ளுகிர்த் தளிர்க்கை நோவ
மாடகம் பற்றி வார்ந்த
கள்ளென நரம்பு விக்கிக்
கண்ணோடு மனமுங்கூட்டி
வெள்ளிய முறுவல் தோன்ற
விருந்தென மகளிர் ஈந்த
தெள்விளிப் பாணித் தீந் தேன்
செவிமடுத்துஇனிதுசென்றூர்".

இந்தக் காட்சிகளையெல்லாம் கம்பர் தமிழ் நாட்டிலேயே காட்டுகின்றூர்; தமிழ் மக்களுக்கே காட்டுகின்றூர் என்பதை நாம் உணரவேண்டும். இத்தகையகாட்சி — கலைவளர்ச்சி — நம் நாட்டிலே ஏற்படவேண்டும். இது ஏற்பட்டாற்ருன் நம் பண்பாடு ஓங்கும், நம் இனம் சிறக்கும், நாம் எல்லோரும் இன்பமாக என்றும் வாழலாம். சிறக,

### விருந்து விழா

கலைகள் வளர்ந்தோங்குவதற்கு அவற்றிலே ஆர்வம் ஏற்படவேண்டும். அவற்றை வளர்க்க வேண்டுமென்னும் கருத்து உண்டாகவேண்டும். இவற்றை உண்டாக்குவதற்கு கலை விருந்தை அளிப்பதற்குமாகவே நாம் இம் முத்தமிழ் விழாவினை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றூம். எங்கள் முயற்சி வெற்றியும் கண் [illegible]

## சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம் குவாலாலம்பூர்

மேற்படி சங்கத்தின் இருபத்தைந்தாவது வருடாந்த அறிக்கை, சைவ வாழ்க்கை முறை வளர்ச்சியை உள்ளத்திற் கொண்டுள்ளார் யாவருக்கும் பெரும் இன்பம் பயப்பதாயிருக்கின்றது. "வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது" என்றபடி தம் தாய்நாட்டை விட்டு வெளியே சென்றபோதிலும் எம சைவச் சகோதரர் "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பது உண்மையாமாறு தாம் இப்போ வதியும் நாட்டிலும் சைவ வாழ்க்கையை வளர்க்கப் பெரிதும் முயன்று வருகின்றனரென்பதைக் குறித்த அறிக்கை இனிது விளக்குகின்றது.

ஆலய பரிபாலனம், நித்திய பூசை, உற்சவங்கள், குருபூசைகள, சமயப் பிரசங்கங்கள் முதலியவற்ருேடு ஆலயத்துக்குச் சிறந்த அங்கங்களாகிய திருநந்தனவனம், மடம் ஆகியவையும் நன்கு நடைபெறுதல் மகிழ்வுக்குரியதே. சமய முறைப்படி வேண்டப்படும் மயானபரிபலனஞ் செய்தலும் குறிப்பிடத்தக்கது.

## மேலங்கியில்லா வித்தகன்

கொழும்பு கிறீஸ்தவ வாலிப சங்க மேடையில் பேராசிரியர் ஸ்ரீ துரைசாமி சாஸ்திரி அவர்கள மேலங்கியில்லாமல் நின்று பேருரையொன் ருற்றினராம். ஆண்டுள்ளோருக்கு அக்காட்சி அருவருப்பை விளைத்ததேயெனினும் அன்னூருடைய பொருள் செறிந்த சொற்பெருக்கு அவர்களை அடக்கிவொடுக்கி ஆனந்தத்தி லமிழ்த்தியதென்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயு சுவாமி சித்திர இரதத் திருவிழா

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி சம்மாங்கோட்டிலிருந்து தமது சித்திர இரதத்திலெழுந்தருளி வெள்ளவத்தைக்குச் சென்று திரும்பும் திருவிழா நிகழ்ச்சிகள பின்வருமாறெனச் சம்மாங்கோட்டார் அறியத் தருகின்றனர்:-

சனி (2-8-52) மகேஸ்வர பூசை, ஞாயிறு (3-8-52) சுவாமி இரதத்தில் எழுந்தருளி வெள்ளவத்தையடைந்தருளுதல், திங்கள் விசேஷ பூசையும் அடியார் பணியும், செவ்வாய் தீர்த்தம, புதன் தமது திருக்கோயிலுக் கெழுந்தருளுதல்.

## சென்னை மதுவிலக்கு

சென்னைச் சட்டசபையில் மதுவிலக்குப் பிரேரணை நிறைவேறியது.

எதையுமெதிர்க்கும் எதிர்க் கட்சியினர் இதையுமெதிர்த்தார்கள். இத்தமிழ் மக்கள் "உட்காப்படார் ஒழிபிழுப்பர் எஞ்ஞான்றும் கட்காதல் கொண்டொழுகுபவர்" என்ற திருக்குறளை ஹிந்தி மொழியினராகிய இந்திய நிதிமந்திரி ஸ்ரீ தேஷ்முக் அவர்கள்தான் எடுத்துக் காட்டினுலும் காணூர் போலும்.

உ

### என் சிந்தை புகுந்தாய் போற்றி!

திருச்சிற்றம்பலம்

ஊராகின்றவுலகேபோற்றி யோங்கியழலாய்நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும்பரந்தாய்போற்றி பேராதென்சிந்தைபுகுந்தாய்போற்றி
நீராவியானநிழலேபோற்றி நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகின்றமுகிலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அலை

# வரவு செலவு வெளியீட்டு விவாதம்

## ஆருண்டுத்திட்டம் ஆறு பெண்ணு?

### நாவன்மை பயக்குமா நாட்டுக்கு நன்மை?

ஆண்டாண்டுதோறும் வரவு செலவுத் திட்டம் உரிய காலத்திற் பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்குரிய கிரியைகள் ஒரேவிதத்தின. ஆனற் பேச்சுமட்டும் பேதப்படும். இம்முறை நிதி மந்திரியின் ஆரம்பப் பேச்சுக் காரசாரமாயில்லையாம்!

எதிர்க்கட்சிக்காக வழமைபோல Dr. N. M. பெரேரா வாய்ப் போரைத் தொடக்கி வைத்தார். அரசாங்கம் சென்ற ஆண்டுகளில ஒன்றுமே செய்து முடிக்கவில்லை என்பதுதான் அவர் பேச்சின் சாராம்சம்.

தற்காலிக மந்திரி திரு. குமாரசுவாமி அரசாங்கம் எதைத்தான் செய்து முடிக்கவில்லையென்றும் அது செய்து முடிக்காதவை யார்தான் செய்து முடிக்கக்கூடியவர்கள் என்றமுறையிலும பதிலிறுத்தார்.

திரு. கு வன்னியசிங்கம் கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தின்படி சிங்களவர்களுக்கே உரிமையுண்டென அரசாங்கம் கட்டளை பிறப்பித்திருப்பதாக இந்திய மாத வெளியீட்டில் இலங்கை அரசாங்க உத்தியோகத்தர் கட்டுரை வரைந்திருப்பதாகக் கூறினர். பிரதமர் அப்படி ஒரு கட்டளையும் பிறப்பிக்கப்படவில்லை என்று ஆட்சேபித்தார்.

இன்னும் அநேகர் பேசுவார்கள்; சரமாரியாகச் சொற் பெருக்குவார்கள். ஈற்றில் வரவு செலவுத் திட்டம் நிறைவேறும். பேச்சும் செலவான மூச்சும் வீண் பிரயத்தனம் ஆகவே முடியும்.

பாராளுமன்றத்திலே பல வேறு காலங்களிலும் உணவு உற்பத்தி போதியதாயில்லை என்று பரிதபிக்கிறூர்கள், பரிந்து பேசுகிறூர்கள் இந்த நூற்றொருவர்களும் பாராளுமன்ற வெளியிலே உணவு உற்பத்திச் செய்கையைக் கூட்டு முயற்சியாற் செய்துகாட்டி வைத்தாலல்லவோ நல்லெண்ணம் தெரியவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அர் சணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனுமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தனஹூ ஆடிமீ
௧௦ உ வெள்ளிக்கிழமை

## சுகாதார வாரம்

வழமையாக வந்து கொண்டிருக்கும் "வாரங்கள்" போல நல்வாழ்வுக்குரிய நன்னெறியினைநினைவு கூருந்தரத்தனவாகிய 'வாரங்களும்' முறைமுறையாகக் கொண்டாடப்பெற்று வருகின்றன. கல்வி வாரம், ஐக்கியஇயக்கவாரம், சுதந்திரவாரம் என்றபடி சுகாதாரவாரமும் இப்பொழுது நடைபெறுகின்றது வழமை என்றஅளவில் நின்றுவிட்டால் இக்கொண்டாட்டங்கள் சில காலத்தின் பின் கவர்ச்சிகொடாதருகிவிடும். எனவே ஒவ்வோராண்டும் நவமான முறையிலே நாட்டில் மக்கள் நயந்து விரும்பக்கூடியதாகப் பலவேறு நவீனங்களுடன் இவ் வாரங்கள் கொண்டாடப் பெறுகின்றன. ஆனல் அடிப்படையாயுள்ள நோக்கம் மக்கள் நோயற்ற வாழ்வு வாழ்ந்து குறைவற்ற செல்வர்களாயின்பமனுபவித்தல் வேண்டுமென்பதே.

விஞ்ஞான சாத்திரக் கல்வி பெருகி வரும் இஞ்ஞான்று புறத்தூய்மை பெறக்கூடிய சாதனங்கள் அளப்பில உண்டு. காடுகள் நாடுகளாயும் நாட்டுப் பக்கங்கள் நகர்ப்புறங்களாயும் விருத்தியடைந்து வரும் வேகத்தைக் கவனிக்குமிடத்துச் சுகாதாரத்தைப்பற்றி எவரும் போதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட வேண்டியதில்லை என்றே சொல்லவேண்டும். ஆனல் நிலைமை அவ்வாறில்லை. வெளித் தோற்றத்துக்கு விரும்பக்கூடிய வேடத்தைப் போட்டுவிடுவதுபோலல்லாது சீர்திருத்தம் என்ற சொற்றொடர் உரிய கருத்துடன் உபயோகிக்கப்படுவதாயில்லை.

நோயணுகா வாழ்க்கைக்கு நுண்ணிய கவனத்தோடு புனிதமாயிருத்தலும் நோயுண்டானல் அதற்குரிய வைத்திய விதிப்படி ஒழுகுதலுமே பொதுவாய் மனிதனல் மதி கொண்டு செய்யக்கூடியன. தமிழ்ப் பண்பினை எடுத்துரைக்கும் பழைய நூல்களெல்லாம் உடம்பைப் பேணி வருவதை ஒரு பெருங்கடமையாயும் அதனை எவ்வாறு செய்வதென்பதையும் நன்ருக விளக்கி இருக்கின்றன,

## ஜாமைக்க சுதந்திரம்

ஜாமைக்க பிரதிநிதிகள் சபையில் தங்கள் நாட்டுக்குச் சுயராச்சியம் வேண்டுமென்ற ஒரு பிரேரணை நிறைவேற்றப் பட்டிருக்கின்றது.

'புறத்தூய்மை நீரான் அமையும்' என்றபொழுது உடம்பைச் சுத்தப்படுத்தும் உபாயத்தையும் அதற்குரிய உபகரணத்தையும் குறிப்பாயுணர்த்தினர் புலவர். புனிதத்திற்குக் காரண சாதனமாக உள்ள நீரையே சுத்தமாக வைத்துக் கொள்வது முதற் கடமையாகின்றது.

யாழ்ப்பாண நகரசபைத் தலைவர் சுகாதாரவார வேண்டுகோளிலே உணவுப் பொருளைக் கையாளுகின்றவர்களுக்குப் புத்திமதி புகட்டுமுகத்தான் ஒழுக்க முறைகள் பல எடுத்துக்காட்டியிருக்கின்றார். உணவுப்பொருட்களை உதவும் நிலையங்களில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றை நாம் வற்புறுத்திக் கூற விரும்புகின்றோம். உணவு தயாரிப்பதற்குரிய நீர் சுத்தமானதா, புனிதமான நீர் நிலையிலிருந்து எடுக்கப்படுகிறதா, அவ்வாறு பெற்றுக்கொண்ட நீர் புற அழுக்குப் படியாது பாதுகாத்து வைக்கப்படுகின்றதா என்றெல்லாம்ஆராயவேண்டும். நீர்நிலைகள் நாட்டுப்புறங்களிலே நித்தியமும்பயிர்களுக்குநீர்ப்பாய்ச்சலுக்குபயோகிக்கப்படுவனவாதலாற் புனிதமாகவேயிருக்கும். நீர் ஊறியவண்ணமே நித்திய சுத்தமாயிருக்கும். நகர்ப்புறங்களிலோ அவ்வாறு பயிர்களுக்கு நீர் விடுவ தின்மையால் கிணறுகள் சுத்தமாயிருக்க மாட்டா. இந்த நிலைகளில் மொண்டு கொள்ளப்படும் நீர் அசுத்தமாகவே யிருக்கும். சுகாதாரப் பகுதியார் நகர்ப்புறங்களிலுள்ள நீர் நிலைகளைப் பரிசிலனை செய்து அவற்றை நல்ல நிலையிற் பேணி வைத்திருக்க வேண்டிய முறைகளைக் கையாளவேண்டுமென்றுசொல்லுகின்றோம்.

இதுபோன்ற இன்னமும் பலவகைகளிலே உணவை நஞ்சு படியச் செய்துவிடும் ஏதுக்கள் உள. அவற்றையெல்லாம நகரசபைத் தலைவர் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். உணவுக்காகிய மூலப் பொருள்கள் புனிதப் படுத்தப்பட வேண்டியதும் சமையல் செய்யப்பெற்ற உணவு சுத்தமான பாத்திரங்களிலே, தூய்மையான இடத்திலே பேணி வைக்கப்பட வேண்டியதும் அவசியம். இன்னமும் மேலாக உணவுப் பொருள்களை எடுத்து உதவுகின்றவர்கள் உடம்பு சுத்தமாயிருத்தல் வேண்டும் இவையெல்லாம் விதிகளாக நூல்களில் எழுதப்பட்டு அல்லது உள்நாட்டு நிர்வாக நிலையங்களின் பிரமாணங்களாக அமைக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் தனது சுயங்கருதியேனும் உடம்பில் நோய் உறாவண்ணமும் உயிரோடு உரிய காலம் வரைக்கும் வாழ்ந்து வருவதற்காகவும் செய்ய வேண்டிய தொன்று.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

### அறியாப் பெண்ணுக்கு!

இப்பொழுது உதவப்படுகிற 'அளவு' அரிசியிருக்கிறதே அது ஒரு சாதி அரிசி. அடுப்பங்கரை அம்மா மாருக்கே 'உலை' வைத்துவிடும்போலிருக்கிறது. நிலைமையை அறிந்த உணவுக் கட்டுப்பாட்டதிகாரி உபாயம் ஒன்றல்லப் பல கூறியிருக்கிறார்.

x x x

### அமுது சமைத்தலிற் புதுமை!

நளபாகம் வீமபாகம் என்று ஆண்கள் புகழ்வார்களே. அது போல்'அரசாங்க பாகம்'ஒன்று வெளிவந்திருக்கிறது. ஆக்குந் தொழில் ஆற்றல்படைத்த அரிவையர்களுக்குத் தெரியாத சில நுணுக்கங்கள். அரிசியைப் பாத்திரத்திற் போட்டு வேகவிட்டால் அடுப்படியில் அம்மா தன்பாட்டில் வேறு அலுவல்கள் செய்து கொண்டிருக்க முடியாது. ஏதோ ஒரு ஆசனத்திலிருந்து இந்த அரிசியின் அட்டகாசத்தை அடக்க வழிவகை தேடியவண்ணம் இருக்கவேண்டுமாம்.

x x x

### பல்வகைப் பாகம்

வறுத்தல், பொரித்தல், அவித்தல் என்றெல்லாஞ் செய்து கொள்ள வேண்டும் இன்னமுமொன்றுண்டு குற்றம் பொறுத்தலும் வேண்டும் - அளவு அரிசி பெறுவதும் போதும் அளவுகடந்த அலைச்சலும் போதும என்று கூக்குரல் இடும் பெண்கள ஒரு புரட்சிக் கூட்டம் கூடப் போகின்றார்களாம்!

x x x

### சோதனைகளுக்குச் சோதனை காலம்

'மாறி மாறிவருங் காலமே' என்றால் இப்படி மாற்றமா. காலையில் ஒன்று கடும் பகலில் ஒன்று மாலையில் ஒன்று? சிரேட்ட பாடசாலைத தராதரப் பரீட்சை என்றார்கள். இது பழையகாலக் கேம்பிரிச் சர்வகலாசாலைச் சிரேட்டத ராதரப் பரீட்சையின் வழித் தோன்றல் அதுதான் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு நிற்கக்கூடாதா? இப்பொழுது பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையாய் மாறி அதிற் கீழ்ப்பிரிவு மேற்பிரிவு என்று வகைமாறி நிற்கப்போகின்றதாம்.

x x x

### மாணவர் படும்பாடு?

ஆண்டுக்கொரு பாடப் புத்தகம், அமாவாசைக்கொரு ஆசிரியர் எனறவிதமாக மாணவர்படும் பாடு ஒரு பக்கம். பரீட்சைகளும் பாடவிதானங்களும் மாறிவிட்டாற் பேசவும் வேண்டுமா? ஒரு பாடத்திற் சித்தி என்றாலும் ஒரு தராதரப் பத்திரம் கிடைக்குமே என்று சிறுவன் காரியமறிந்த கருநாடகத் தந்தைக்குச் சொல்லி விட்டு வேறு பாடங்கள் படிக்க மறுத்துவிட்டான். தந்தைக்கு அடங்காத கோபம ஆனல் ஆசிரிலே அதைச்செலுத்துவது. அரசாங்கத்தில் என்றால் செலவிட்டுச் சினத்தில் ஆலவா?

## இலங்கை இந்தியர் பிரசா உரிமை

### உலக நீதிமன்றத் தீர்ப்பு வேண்டும்

கொத்மலே - தொலெஸ்பாகே பகுதி இலங்கைத் தோட்ட உத்தியோகஸ்தர் சங்க வருடாந்தக் கூட்டத்திற் பேசுகையில் இலங்கை இந்தியர் பிரஜா உரிமை விஷயத்தில் அரசாங்கம் நன்மை பயப்பது ஒன்றுஞ் செய்யாதிருத்தலால் இவ்விஷயம் உலக நீதிமன்றத்தாரால் ஆராய்ந்து மானிட தர்மத்திற்கேற்ற தீர்ப்பளிக்கப்பட ஒழுங்கு செய்யவேண்டுமென்று இலங்கை அரசாங்கத்துக்கு திரு. உபெவிக்கிரம அவர்கள் கல்லுரை கூறினர்.

காரியதரிசி திரு. L. B. ஜயசேன அவர்கள் பேசும்பொழுது 700,000 இந்திய மக்கள் வாக்குரிமையில்லாதிருத்தல் முழுச் சிங்கள சாதிக்கும் அவமானமாயிருக்கிறதென்று கூறினர்.

## ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க உபதலைவருக்குஉபசாரணை

கௌரவ திரு. சு. நடேசன் அவர்கள் தபால் — செய்திப் பகுதி மந்திரியார் நியமனம பெற்ற மகிழ்ச்சியைக் குறித்து ஜூலை மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் சங்கத்தின் சார்பாக அன்னாருக்கு ஓர் உபசரணைக் கூட்டம நடைபெறுமென்று சங்கக் காரியதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்கள் அறிவிக்கிறார்.

## நித்திரை வருவதேன்?

பம்பாய் சட்டசபை அங்கத்தவர்கள் சபையில் நித்திரை செய்கிறார்களென்றும் அவ்வாறு செய்தல் கூடாதென்றும் இந்திய மகாராட்டுக் கட்சியினருக்குச் சுற்றறிக்கை யொன்று சென்றிருக்கிறதாம். இத்தகைய காட்சி இலங்கைப் பாராளுமன்றத்திலுமுண்டு. இதற்குக் காரணமென்னோ? தங்கள் கடமையைப் பற்றிய ஆர்வமெனறே கருத வேண்டும்!

## அரசாங்க வேலைநேரம்

பாகிஸ்தான் அரசாங்கக்காரியாலயங்களில் நாளொன்றுக்கு ஏழரை மணித்தியால வேலை செய்யவேண்டிய ஒழுங்கிருந்தது. இப்போ அது ஆறரை மணித்தியாலமாகக் குறைக்கப் பட்டிருக்கின்றது. காசநோய் அதிகரித்தல் ஒரு விசேஷ ஏதுவாகக் கூறப்படுகின்றது.

## திருக்குறள் எடுத்துக்காட்டு

### இந்திய நிதிமந்திரியின் சிந்தனைச் சிறப்பு

இந்திய பாராளுமன்றத்தில் இந்திய அரசாங்க வரவு செலவுக் கணக்கைச் சமர்ப்பித்துப் பேசும்பொழுது இந்திய நிதிமந்திரி ஸ்ரீ தேஷ்முக் அவர்கள் தமது நிலைக்காதாரமாக "இலமென்றசைஇ இருப்பாரைக் காணின், நிலமென்னு நல்லாணகும்" என்னுந் திருக்குறளை எடுத்துக்காட்டாக எடுத்தாண்டாரென அறிய வருகிறது. போற்றற்குரிய இச்செய்தியை அறிந்து தமிழ்த்தாய் தந்த தனிப்பெரும் புதல்வன் ஸ்ரீ இராஜகோபாலச்சாரியார் அவர்கள் புகழ்மொழி எழுதினராம்.

ஸ்ரீ தேஷ்முக் அவர்கள் ஹிந்திமொழியிற் பேசும் சம்ஸ்கிருத பண்டிதன் என்பது இங்கே உற்று நோக்கவேண்டியது.

## அகிலஇலங்கைச் சித்தஆயுள்வேத வைத்தியசங்கம்

# 22ம் வருடாந்தக் கூட்டம்

இலங்கை ஆயுள்வேதசித்த வைத்தியசாலை மண்டபத்தில் ஷெ சங்கக்கூட்டம் 5 - 7 - 52 காலை 9 மணியளவில் வைத்தியர் திரு. A.K. குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அறிக்கைகள் வாசிக்கப் பெற்றபின் புத்தாண்டு உத்தியோகஸ்தர் பின்வருமாறு தெரிவு செய்யப்பெற்றனர்.

போஷகர்கள்: பாராளுமன்றத் தமிழ்ப்பிரதிநிதிகளுடன் Dr. S. சுப்பிரமணியம், Dr. C. குருசாமி, திரு S. சண்முகம், திரு. V. மகேசன். தலைவர்: A. K. குமாரசாமி. உபதலைவர்கள்: திருவாளர்கள்: T. இராமலிங்கம், V. குமாரசாமி, V.செல்லத்துரை,யோன் மார்க் காரியதரிசி, உபகாரியதரிசி, தனாதிகாரி, உபதனாதிகாரிகளாக திருவாளர்கள் A. S. இராசையா, S. S. ஆறுமுகம், E கந்தையா, M. S சுந்தரம் முறையே தெரிவுசெய்யப்பெற்றனர். திருவாளர்கள்: V. கனகசபை, S. P. அம்பலவாணர், M. கதிரவேற்பிள்ளை முதலிய 32 வைத்தியர்கள் நிருவாகசபை அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

ஷெ சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் திருவாளர்கள்: V. வீரசிங்கம் M.P. T. இராமலிங்கம் M. P., G. G. பொன்னம்பலம, V. மகேசன் முதலியோருடன் யாழ்ப்பாணம் நகரசபை அங்கத்தவரும் சமுகமளித்தனர்.

(1) இலங்கையின் தலைப் பட்டினங்களில் சுதேச வைத்திய நிலையங்களமைக்க அரசினர் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்,

(2) யாழ்ப்பாணத்தில்அரசாங்க உதவியுடன் ஒரு சுதேசவைத்தியசாலையாவது அமைக்கும்படி யாழ்ப்பாண நகரசபையைக் கேட்டுக்கொள்ளுவதாகவும்,

(3) ஐக்கியசங்க விதிப்படி ஒரு சுதேசவைத்திய மருந்துச்சாலை அமைக்க வேண்டுமெனவும்,

(4) ஒரு சுதேச வைத்திய நூல்நிலையம அமைக்கவேண்டுமென்றும், நாலுபிரேரணைகள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து அறிவித்தல்

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருட மகோற்சவம் 1952

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1952-ம் ஆண்டு ஜூலை மாதம் 27ந் திகதி தொடக்கம், ஆகஸ்டு 21ந் திகதி முடிய எவ்வகையான வண்டிகளும் கீழ்க் காட்டப்படும் தெருவீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பெருந்தெருவில் ஆனைப்பந்திச்சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்.

(ஆ) பண்டாரக்குளத்துஒழுங்கைக்கும பிராமணக்கட்டுக்குள ஒழுங்கைக்கும் இடையேயுள்ள கோயிலின் மேற்குவீதி.

2. சமயோசிதமாக மாற்றப்படும் தெருக்களின் விபரம்:

குறித்தகாலத்திலே வண்டிகள் ரதங்களைச்செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள்மூலம் செலுத்துவார்களாக.

(அ) யாழ்ப்பாணத்தி லிருந்து கோப்பாய் மார்க்கம போக்குவரவு செய்வோர் நாவலர் தெருவாலும், நல்லூர்க் குறுக்குத் தெருவாலும் வண்டி ரதங்களைச் செலுத்துக.

(ஆ) அரசடித் தெருமூலம் கோப்பாய் மார்க்கம் செல்லுவோர் “உவைமன்” தெரு நாவலர்தெரு நல்லூர்க்குறுக்குத்தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக.

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் ரதங்கள் மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ் வண்டிகளையும் ரதங்களையும் கொண்டு போய் நிரலே ஒதுக்கிவிடுதற்கான தானங்கள் மூன்றிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(அ) அரசடித் தெரு மூலமாகக் குறித்த கோயிலுக்குச் செல்லும் வண்டிகள் ரதஙகள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப்படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயிற் தெருவீதியால் வரும் வண்டிகள் கைலாயபிள்ளையார் கோவில் நிலத்தில் விடப்படலாம்.

(இ) கோப்பாய் மார்க்கமாக வரும வண்டிகள் ரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடலாம்.

(Sgd) C. P. WAMBEEK,
வடமாகாணப் பொலிஸ்தலைவர்.

பொலிஸ்தானம்,
யாழ்ப்பாணம்
18, ஜூலை, 1952.

( M. 82 25. 29—7—52 )

# காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தர்மடம் வாசிகளான பராயமற்ற (1) மார்கண்டு மகள் இராஜேஸ்வரி, (2) மார்கண்டு முத்துக்குமாரசாமி (3) மார்கண்டு சிவஞானம் (4) மார்கண்டு நடராசா இவர்களின் பராபரிப்புத் தத்துவ விண்ணப்பத்தில்.

பராபரிப்புத் தத்துவ வழக்கு இல. 283 இவ்வழக்கில் கோட்டாரின் கட்டளைப்படி இவ் விளம்பரத்தில் பின் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை விற்க இருப்பதால் இக்காணியை வாங்கவிரும்புவோர் இன்று தொடக்கம் 21 நாட்களுக்குள் தங்கள் விலையைக் குறித்து விண்ணப்பங்களை எனக்கு அல்லது யாழ்ப்பாணம் பெரியகோட்டுச் சக்கிடுத்தாருக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகிறது.

### ஆதன இடாப்பு

காரைதீவு கிழக்கு வலந்தலை இறை வட்டக்கிராய் பரப்பு நிலை லாசசம் $4\frac{1}{4}$ செய்பயிர் வான்பயிர், வீடுகளும் கிணறும், இதில் சொரியலாய் $1\frac{1}{2}$ பரப்பும் அதறகுரியவைகளும் எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை மேற்கு சுப்பிரமணியம் பெண் மாணிக்கத்திஞதனம், வடக்கு கணபதிப்பிள்ளை அப்பாசாமியினுதனம்.

இங்ஙனம்,
ச. க. கதிரவேலு
பராபரிப்புத் தத்துவகாரியின் பிரக்கிராசியார்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

M 83 25—7—52.

# பெரியபுராண படனப் பூர்த்தியும், சுந்தரமூர்த்திநாயனர் குருபூசையும்

நிகழும் நந்தன ஷூ ஆடி மீ கரு-ந் உ (30-7-52) புதன்கிழமை இறைவன் திருவருள் முன்னிட்டு யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆதரவில் பெரியபுராணப் பூர்த்தியும் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசையும் மேற்படி சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் கீழ்க்காணும் கிரமப்படி நடைபெறும்.

முற்பகல் 10 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணிவரை: கடவுளாராதனை, நால்வர்பூசை, சுந்தரமூர்த்திநாயனர் சரித்திரம்படித்தல், மாகேசுரபூசை.

மாலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை: பெரியபுராணப் பூர்த்திப்படிப்பு —வெள்ளானைச்சருக்கம்.

அதன் மேல் பெரியபுராணத் திருமுறையை நால்வர்திருவுருவப் படத்துடன் அலங்காரஞ்செய்து புஷ்ப விமானத்தில ஊர்வலமாக எழுந்தருளச் செய்தல்.

☞ ஊர்வலமார்க்கம்:— நாவலர் மண்டபம், கல்லூரிவீதி, நீராவியடிவீதி, நாவலர்வீதி, காங்கேயன்துறைவீதி, கல்லூரிவீதி, நாவலர்மண்டபம்.

அன்பர்கள்
சமுகமளிப்பார்களாக.

மூ. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம், 23-7-52

# ஆணோ பெண்ணோ?

கருப்பத்தி லிருக்கும் பிள்ளை ஆணோ பெண்ணோ என்றறிவதற்கு உமிழ்நீர்சோதனைமுறையொன்றை சிகாகோ வைத்தியர் ரூப் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார்.

# ஸ்ரீகதிரமலை தண்ணீர்ப் பந்தல் திருப்பணி விஞ்ஞாபனம்

ஐயா,

1. நாம் ஸ்ரீ கதிரமலையில் தண்ணீர்ப்பந்தல் ஒன்று ஸ்தாபித்துச் சகல யாத்திரீகர்கட்கும் நாளாந்தம் தொடர்ச்சியாக நடத்தி வரும் நோக்கத்துடனிருப்பதாலும், இவ் வருஷம் தொடரும் ஆடி மாதம் 21-7 52 ம் திகதி தொடங்க நிச்சயித்துள்ளோம்.

2. நாம் ஸ்ரீ கதிரமலையுச்சிக்கு போகவரச் சகல யாத்திரீகர்கட்கும் அடியார்களுக்கும் வசதியேற்படுத்தும் நோக்கமாக அப் பாதையிலுள்ள காடு முரடானவற்றையும், முள்செடி முதலியவற்றையும் வெட்டித் துப்பரவு செய்து கற்படிகளமைத்து ஏற இறங்க வசதியுண்டு பண்ணி ஓர் நிலைபரமான பந்தலொன்றும் அமைத்துவைக்க நிச்சயித்திருக்கின்றோம்.

3. தற்போது ஸ்ரீகதிர்காமத்திலிருந்து ஸ்ரீ கதிரமலைக்குப் பிரயாணம் செய்யும் பாதை முட்செடிகள் அடர்ந்து வளர்ந்திருப்பதால் அவற்றைப் பன்னிரண்டு அடி (12) அகலத்துக்குத் துப்பரவு செய்ய வேண்டும்.

4. இத் திருப்பணியை நாம் ஸ்ரீ கதிரமலையிலே நிரந்தரமாக இருந்து 10, 12, தொழிலாளரை அமைத்துத் துப்பரவு செய்வதிலீடுபடுத்தும நோக்கத்துடன் ஒழுங்குகள் செய்யப்படுகின்றது. இதக மகிமைவாய்ந்த புண்ணிய ஸ்தலத்தை எம்மாலியன்ற சிரத்தை எடுத்துத் திருத்தியமைக்க வேண்டியது எமது அறியச் செல்வமாகிய திருத்தொண்டென இயம்புவது மிகையாகாது.

5 இத்திருத்தொண்டை நிறைவேற்ற அன்பர்களனைவரும் இயன்ற பொருளுதவி ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

இத் திருப்பணிக்குதவும் புண்ணிய சீலர்கள் வியாபேருக்கும் ஓர் முக்கிய விண்ணப்பம்.

அனேகர் கதிரமலைத் திருப்பணிக்கென்றும், தண்ணீர்ப்பந்தலுக்கென்றும் ஏமாற்றிப் பணம் பொருள் சேகரிப்பது இலங்கையிலே, மிக மோசமாக வளர்ந்து கொண்டே போகிறது. ஆனபடியால் அடியார்களனைவரும் நன்கு ஆராய்ந்து போலிவேஷக்காரரிடம திருப்பணியை உதவாது நேரே எனது விலாசத்துக்கேனும் என் முகதாவிலேனும் உதவி செய்வது சாலச் சிறந்தது.

இங்ஙனம்,
சாது, ச. முருகேசு

மனேஜிங்டைரக்டர்
கதிரமலைத்தொண்டன்
கதிர்காமம் P. O.
27–5–52.

M. 80 25, 29—7—52.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

அச்சுவேலி வடக்கு
சரவணை பொன்னன் வழக்காளி
இல 7754 எதிராக
பத்தமேனி முருகர் சபாபதி கைம்பெண் தெய்வானை எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 7754 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1952 ஷூ புரட்டாசி மீ 5 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோயிற்பற்று பத்தமேனியிறை கொல்லன்கிணற்றடியும் இரத்து சீமாவும் பரப்பு நிலை. இலா. $7\frac{1}{2}$ கிணறும் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு வெள்ளைக் குட்டிக்கும் பொன்னையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு ஒழுங்கையும் ஆறுமுகம் கதிரேசுவின் உருத்தாளருக்கும் பங்காளருக்கும், தெற்கு ஆறுமுகம் கதிரேசுவின் உருத்தாளருக்கும் பங்காளருக்கும் மறுபேருக்கும். இதடங்கலில் மேற்குப் புறமாக இருக்கும் கல்வீட்டிலும் குசினியிலும் கொட்டிலிலும் அரைவாசியும் மற்றைய வீடுகள் பிறநீங்கலாக. மிகுதி அடங்கலில் சொரியலாக 5/32 பங்கும்,

S Ratnasabapathy
Commissioner of Sales
23-7-52

M. 85 25—7—52

# அளவெட்டி சதானந்த வித்தியாலயம் சுகாதார வாரம்

(23 - 7 - 52) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இப் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்கள் தலைமையில் சுகாதாரவாரக் கொண்டாட்டம் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. அத்தருணம் பாடசாலை மாணவர் பேச்சு, சங்கீதம் ஆகியவற்றுடன் அளவெட்டி அரசாங்கவைத்தியசாலை அதிபர் திரு. C. சோமசுந்தரம் அவர்களால் “சுகாதார விதிகள்” என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவும ஆற்றப்பெறறது.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

**இவ்வாரப் பலன்கள் 27—7—52——2—8—52**

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதறகால்.**

வியாபார சித்தி தரக்கூடிய நல்ல காலம். ஆனல் அதிகம் செலவழிக்கக்கூடும் ஒரு வாகனம் வாங்கக்கூடும் அல்லது ஒரு காணியில் காசுவிடக்கூடும். மாதாவழி இனத்தவரால் அதிக உதவியுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்த வாரம் தொடங்கும் முயற்சியில் நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவி செய்வார்கள் குடும்ப சமாதானமும் நிச்சயம். புதுமுயற்சிகளுக்கு மிகவும் நல்லகாலம். தொடக்கச் செலவைக் கவனியாது, திட்டங்களை முன்னேற்றுக.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

இந்த வாரம் சில திட்டங்கள் நன்மைதர இடமுண்டு. அணிமையில்வரும் சில நாட்களில் வருடம் முழுதிலும் வரக்கூடியவற்றுள் மிகச்சிறந்த தருணங்கள் வரும். வார இறுதியில் தேக சுகத்தைப் பற்றி விசேஷமாய்க் கண்ணைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்த வாரம் பணப்பகுதி நிறைவாயிருக்கமாட்டாது. சில முதிர்ந்த இனத்தவர் கோபம் மூட்டக்கூடும். தேக சுகமும் அதிகம் நல்லாயிராது.

வார இறுதியில் புது நண்பர் சில உதவி செய்வர்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.**

இந்த வாரம் தொடக்கம் பணநிலை திருந்தும். சகோதர சகோதரிகள் அதிக உதவி செய்வர். சமூகத்துறையிலும் விசேஷமான வாரம். திட்டத்தை முன்னேற்றுக.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் சில புதுப்பொறுப்புகளை ஏற்கவேண்டி வரும். மனச் சமாதானமிராது. பெறக்கூடிய பணம் முழுதும் வார இறுதிக்கு முன் செலவாகும். நண்பர் அதிகம் உதவிசெய்வர்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்.**

சிறு சுகவீனத் தொந்தரவுகளைத் தவிர, இந்த வாரம், நல்விளைவைத் தரும், புதுத்திட்டங்கள் வளரும். புகழும் சித்தியும் நிச்சயம். வார இறுதியில் தாய்வழி இனத்தவரால சில தொந்தரவுண்டாகக்கூடும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்த வாரம் பணநிலை அதிகம் நல்லாயிராது. இரகசியப் பகைவரால் தொந்தரவுக்குமிடமுண்டு கவனமாயிராவிட்டால் சில விழுக்குகளில் அகப்படக்கூடும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.**

இந்த வாரம் புதுத்திட்டங்கள் நல்ல பலனைத்தரும். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம். இனத்தவர் அதிக உதவிசெய்வர். சமூக சித்தியும் நிச்சயம்,

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

இந்த வாரம் இனத்தவராலும் நண்பராலும் உதவிகள் நிச்சயம். வியாபார முயற்சிகள் நல்லாயிருக்கும். ஆனல் மேலும் பணம் விடுதல் வேண்டும், குடும்ப சமாதானமும் நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் அவமானத்தைப் பற்றிக் கவனமாயிருக்கவும். குடும்பத் தொந்தரவுக்கும் மனச்சலனத்துக்குமிடமுண்டு. வார இறுதியில் பகைவர் பொறி உண்டாக்குவார்கள்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இந்த வாரம் நன்மையான தொடர்புகள் உண்டாகும். பெண்ணின நண்பர் அதிக உதவியளிப்பர். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.


# நோய் குணமாவது எதனுல்?

● அநுபவமான வைத்தியரின்
○ அநுபவமான மருந்தினுல்

**எங்கே பெறலாம்?**

சுதேச வைத்தியக் கல்லூரியிற் கற்றுத் தேர்ச்சியடைந்தவரும், ஆயுள்வேதத்திலும், சித்த வைத்தியத்திலும், இரண சிகிச்சையிலும் நிபுணரும், K. K. S. ரோட், சிவலிங்கப்புளியடியில் இருந்து வைத்தியம் செய்பவருமான Fiscal துரையப்பா அவர்களின் இரண்டாவது மகனுமான

**Dr. T துரைசிங்கம், D. I. M. S., L. M. P.**
அவர்களிடத்தில்.

| இடம்: | காலை: | மாலை: |
|---|---|---|
| தந்தையாரில்லம், | 6—9 | 5—8 |
| சிவலிங்கப்புளியடி. | $9—12\frac{1}{2}$ | $1\frac{1}{2}—4\frac{1}{2}$ |

M. 81 25, 29—7—52


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விண்ணோர்விருந்தமிழ்தின் மேலான தனிப் பண்பு

—

( முதற் பக்கத் தொடர்ச்சி )

பாத நம்முடைய குழந்தைக ளுக்குத் தொடக்கத்திலே பொருள் சிறிதும் விளங்காத பிறமொழிப் பாடல்களைக் கற்பித்தலும், தமிழர்கள் கொண்டாடும் விழாக்களிலே பிறமொழிப் பாடல்களுக்கு முதன்மை கொடுத்துக் குருட்டாட்டம் ஆடுதலும் அருவருப்பான செயல்கள். தமிழருடைய மானத்தைக் கெடுக்கும் முயற்சிகள், அறியாமையின் அடையாளங்கள், நம் பழங்காலப் பெருமையையும் வருங்காலச் சிறப்பையும் அழிக்கும் அணுக்குண்டுகள் என்று பல அறிஞர்கள் சென்ற முத்தமிழ் விழாக்களிலே எடுத்துரைத்தார்கள். அவர்களுடைய அறிவுரைகள் தமிழ்மக்களை விழிப்படையச் செய்து விட்டன. தமிழ் மக்கள்கூடும் பேரவைகளிலே தமிழ்ப்பாடல்களுக்கு முதலிடங் கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தவும் நம் மிளைஞர்கள் தொடங்கிவிட்டார்கள். இது வரவேற்கத் தக்கதே. சிறக,

### அறிஞர்கள் அருங்கடன்

கலைஞர்களை ஆதரித்துப் போற்ற வேண்டியது கலை வளர்ச்சியை விரும்பும் மக்களின் கடமையாகும். இசை நாடகக் கலைஞர்களுக்கு நமது நாட்டிலே போதிய ஆதரவு இருப்பதாகத் தோன்றவில்லை. சிறந்த இசைப் புலவர்களும் நாடகப் புலவர்களும் நம்மிடையே தோன்றுதிருப்பதற்குக் காரணம் இசை நாடகம் பயின்றோரை — இளங்கலைஞர்களை நாம் ஆதரித்து ஊக்கப்படுத்தாமையே ஆகும். நம் நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் முத்தமிழ் நிலையங்கள் ஏற்படவேண்டும். கலை விருந்தினை அளிக்குமாறு கலைஞர்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்குப் பொருளுதவியும் செய்யவேண்டும். எங்கள் மன்றம் மாதந் தோறும் இசை நாடக நிகழ்ச்சிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது என்பதையும் கூற விரும்புகிறேன்.

முத்தமிழையும் வளர்க்கத் தக்க நிலையங்களுள் இப்பொழுது வானொலி நிலையமும் ஒன்றாக இருக்கிறது. சிறந்ததெனறும் கூறலாம். கலைஞர்களை உற்சாகப்படுத்தி அவர்களுடைய கலைத் திறனை நாட்டு மக்கள் யாவருக்கும் பயன்படுத்தும் வாய்ப்புக்கள் வானொலி நிலையத்திற்குண்டு. வானொலிப்பகுதிக்கு மெயர்திரு சு. நடேசன் அவர்கள் அமைச்சராக இருப்பது தமிழ்மக்களுடைய அதிட்டம் என்றே கூறலாம். தமிழ்ப் பற்றும் பண்பாடும் நிறைந்து சிறந்த அறிவும் நல்ல ஆற்றலும் வாய்ந்து விளங்கும் அவரைப் போன்ற தமிழ்ப்பெரியார் ஒருவரை இலங்கையிலே காண முடியாது. ஆகவே இத்தகைய பெரியாருடைய ஆட்சியிலே வானொலிநிலையம் முத்தமிழையும் செம்மையாக வளர்க்கும் என்று நாம் எதிர்பார்க்கலாமன்றோ. அவருடன் எல்லாத் துறைகளிலும் எங்கள் மன்றம் ஒத்துழைக்கும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொண்டு இம் முத்தமிழ்விழாவினைத் தொடங்கிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## அரசாங்க பாஷைக் கமிஷன்

### மூன்றாவது விளம்பரம்

அரசாங்க பரிபாலனக் கருமங்களில் சிங்களத்தையும், தமிழையும் அரசாங்க மொழிகளாக உபயோகிக்கும் நோக்கத்துடன் அவ்வாறு செய்வதற்குரிய சிபார்சுகளை இலங்கை அரசாங்க சபையின் பொறுக்கு சபை ஒன்று ஒரு அறிக்கை மூலமாக வகுத்திருக்கிறது. இந்த அறிக்கை 1946ம் ஆண்டின் xxiiம் நிருவாக காலப் பத்திரமாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

பின் வருவனவற்றை விசாரணை செய்து அறிவிப்பதற்கும் அவைபற்றிச் சிபாரிசு செய்வதற்குமாக அதி உத்தம மகாதேசாதிபதி அவர்கள் அரசாங்க பாஷைக் கமிஷனை நியமித்திருக்கிறார்:-

1. மேலே காட்டிய பொறுக்கு சபை சிபாரிசு செய்துள்ள நடைவடிக்கைகளில் தேவையானவையென்றும், காரியசாத்தியமானவையென்றும் கருதப்படும் நடைவடிக்கைகளைக் கைக்கொள்ளுதற்குரிய கருமமுறை.
2. அந்த நோக்கத்தை அடைவதற்கு எடுக்கப்படவேண்டிய வேறு ஏதும் நடைவடிக்கைகளும் அத்தகைய நடைவடிக்கைகளை எடுப்பதில் கைக்கொள்ளப்படவேண்டிய கருமமுறையும்.
3. அந்த நோக்கத்தை அடைவதற்குச் சகல அரசாங்க பகுதிகளது அல்லது அவற்றில் ஏதாவது ஒன்றினது அல்லது பலவற்றினது பரிபாலனக் கொள்கையிலேனும் பிறகருமத்திலேனும் செய்யப்படவேண்டிய எதும் மாற்றங்கள்.

இப் பிரச்சினை முழுவதும் சம்பந்தமான ஒரு ஆரம்ப ஆராய்ச்சியைக் குறித்த கமிஷன் செய்துவிட்டு அரசாங்கப் பகுதிகள் சிலவற்றை விரிவாக ஆலோசித்தது. அவ்வாறு ஆலோசித்து அது தனது சிபாரிசுகளைத் தனது முதலாம், இரண்டாம், மூன்றாம இடைக்கால அறிக்கைகளிற செய்திருக்கிறது. முதலாம், இரண்டாம் இடைக்கால அறிக்கைகள் முறையே 1951ம் ஆண்டின் xxiம் இல. நிருவாக காலப் பத்திரமாகவும் 1952ம் ஆண்டின் iiiம் இல. நிருவாககாலப் பத்திரமாகவும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய அரசாஙகப் பகுதிகள் சகலவற்றையும்பற்றிய கருமஙகளை ஆற்றக் கமிஷன் இப்போது நிச்சயித்திருக்கிறது. அரசாங்கத்தின் நிரந்தரப் பகுதிகள் பலவித அளவில் பொதுசனஙகளுடன் தொடர்புள்ளவாய் பரிபாலனக் கருமங்கள், தொழிற்கலைக் கருமங்கள் இலக்கியக் கருமங்கள், விஞ்ஞானக் கருமங்கள் என்பவை சம்பந்தமானவையாய் இருக்கின்றனவென்பது, கிடைத்துள்ள தகவலிலிருந்து தெரியவருகிறது. இப்படியாகவுள்ள பல்வேறு பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவமாகப் பின்வரும் அரசாங்கப் பகுதிகள் உள என்று இப்போதைய விசாரணையின் பொருட்டுத் தெரியப்பட்டிருக்கின்றன.

1. "ரெஜிஸ்திரார் ஜெனரல்" எனப்படும் பதிவுக் கருமாதிகாரியின் பகுதி.
2. ரோகுப்பகுதி.
3. ரோடுகள் அல்லது தீதித்தலங்கள்.
4. நீர்ப்பாசனப் பகுதி.
5. கல்விப்பகுதி அல்லது வித்தியா பகுதி.
6. தொல்பொருளாராய்ச்சிப் பகுதி எனவும் வழங்கப்படும் புதைபொருளாராய்ச்சிப் பகுதி.
7. அரசாங்க பாகுபர்ட்டதிகாரியின் பகுதி.

மேலே சொல்லப்பட்டுள்ள பகுதிகள், முந்தி ஆலோசிக்கப்பட்டுள்ள பகுதிகள், அல்லது இதுவரை கமிஷனுல் விசாரணை செய்யப்படாத பகுதிகள் என்னும் இவற்றில் எந்த ஒரு பகுதியைப்பற்றியேனும், அதி முன்னரிலும் பார்க்கக் கூடிய விதத்தில் திறமையுடன் கருமம் ஆற்றவும் பொது சனங்களுக்குச் சேவை செய்யவும்;

(அ) சிங்களத்தையும், தமிழையும் எந்தக் கருமங்களில், எந்த முறைகளினுல் அதி சீக்கிரத்தில் உபயோகத்துக்குக் கொணடுவரலாம்.

(ஆ) இதுபற்றி எந்தவிதமான முறை மாற்றத்தினை அல்லது அரசாங்கக்கரும முறை மாற்றத்தினைக் கொண்டுவரவேண்டும், அல்லது எந்தவிதமான விசேட வசதிகளை அல்லது புதுமுறைகளை அநுட்டிக்க வேண்டும்:

என்பனவற்றில் பொதுசனங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தையும், விருப்பத்தையும் அறியக் கமிஷன் பெரிதும் விரும்புகிறது.

1951 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ம் திகதியைக்கொண்டு 1951ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்து முதற் பகுதியில் உள்ளூர்ப் பத்திரிகைகளில் வெளியாகிய இரண்டாம் விளம்பரத்தின் தொடர்ச்சியாகவே இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

இதுபற்றித் தங்கள் அபிப்பிராயங்களை அறிவிக்க, அல்லது ஆலோசனைகளைத் தெரிவிக்கச் சித்தமாயிருக்கும் பொதுசனங்களும், அரசாங்கப்பகுதித் தலைவர்களும் ஏனையோரும் அத்தகைய அபிப்பிராயங்களையும ஆலோசனைகளையும் எழுத்துமூலமான விஞ்ஞாபன ரூபத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். அரசாங்க சேவையில் இருப்பவர்கள் அத்தகைய எழுத்துமூலமான விஞ்ஞாபனத்தைத் தங்கள் தங்களது பகுதித் தலைவர்கள மூலமாக அனுப்புதல் வேண்டும். 1952ம்ஆண்டு ஒகஸ்ற் மாதம 31ம திகதிக்கு முன் சகல விஞ்ஞாபனங்களும் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அவை அனுப்பப்படுதல் வேண்டும்.

நேர்முகமாக வந்து வாய்ப்பிறப்புச் சாட்சியம் அளிப்பதற்கான ஒழுங்கு சந்தர்ப்பம் நேரும் பொழுது, அப்படி நேருங்கால் தான் செய்யப்படும்.

கமிஷனின் கட்டளைப்படி
என். டீ. விஜேசேகர
அரசாங்க பாஷைக் கமிஷன் காரியதரிசி.

அரசாங்கபாஷைக் கமிஷன் கந்தோர்,
தபால் பெட்டி 598, மலாய்வீதி,
கும்பனித்தெரு-கொழும்பு.
1952ஆ. ஜூலை மீ 1உ.
G. 14 1, & 22—7—51


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE



நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS".
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S 1
(கியாட்லாக் இனும்)
M. 16, 25-4-52—25-10-52.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலஙகள் வரையறுத்தி ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாஙகவுமான விசேஷ ஒழுஙகுகள செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
சிறாப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க்ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, July 25, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org